R-1eg. No. M.

போர்ட். ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

OCTOBER 7, 1930.

ந. 40.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை 1930-ம் ௵ அக்டோபர் ௴ 7௳. [PRICE, 6 pies.

கவர்ன்மென்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

பைனான்ஸ் டிபார்ட்மென்ட்

(மரீன்).

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் ௵ ஸெப்டெம்பர் ௴ 16௳ (மிஸலேனியஸ், 471-ம் ந. கவர்ன்மென்ட் உத்தரவு).

நெ. 82.—இந்தியா கவர்ன்மென்டார் சமாசாரப் பத்திரிகைகளுக்காக வெளியிட்ட அடியிற்கண்ட அறிக்கை மீண்டும் பிரசித்தம் செய்யப்படுகிறது :—

லெஜிஸ்லெடிவ் டிபார்ட்மென்ட்.

சமாதான உடன்படிக்கை.

ஸிம்லா, 1930-ம் ௵ ஆகஸ்ட் ௴ 20௳.

மகாயுத்தம் நடந்துகொண்டிருந்தபோது குறித்த ஓரிடத்தில் அடைத்துவைக்கப்பட்டோ அல்லது தங்களுடைய கப்பல்கள் முழுக்கடிக்கப்பட்டோ எதிரிகளின் நடவடிக்கைகளினால் கஷ்டமடைந்த மாலுமிகள் சில சந்தர்ப்பங்களில் பிரதிபலன் பெற அர்ஹர்களாயிருக்கிறார்களென்பது விஷயமாய் இந்தியா கவர்ன்மென்டார் சம்பந்தப்பட்ட சகலருக்கும் முடிவான திட்டங்கள் பிறப்பிக்க விரும்புகிறார்கள். தமக்குப் பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்று சுதந்தரித்துக் கேட்பவர் - தாம் அடைத்து வைக்கப்பட்டதற்கு முன்பாவது தம்முடைய கப்பல் முழுக்கடிக்கப்பட்டதற்கு முன்பாவது கடைசியாய் எந்த ரேவில் தாம் வேலையில் அமர்ந்திருந்தாரோ அந்த ரேவின் ஷிப்பிங் மாஸ்டரிடம் அது விஷயமாய் மனு செய்துகொள்ளவேண்டும். 1931-ம் ௵ மார்ச் ௴ 31௳க்கு மேற்படாமல் அந்தப்படி மனு செய்துகொள்ளவேண்டும்; மேலும், மேலேகண்ட பிரதிபலன் விஷயமாய் ஷை தேதிக்குப் பிறகு செய்துகொள்ளப்படும் எந்த மனுவும் ஆலோசிக்கப்படமாட்டாதென்று சம்பந்தப்பட்ட சகலருக்கும் இதனால் தெரிவிக்கப்படுகிறது. கடற்கரைப் பிரதேச மாகாணங்களிலும் பஞ்சாப்பிலும் வெளியாகும் சுதேச பாஷைப் பத்திரிகைகளில் இந்த விளம்பரத்தை மீண்டும் பிரசுரிக்கும்படி முக்கியமாய்க் கேட்டுக்கொள்ளலாகிறது.

எச். ஏ. வாட்ஸன்,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

லா டிபார்ட்மென்ட்.

(ஜெனரல்.)

விளம்பரங்கள்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் ௵ ஸெப்டெம்பர் ௴ 17௳ (மிஸலேனியஸ், 3977-ம் ந. கவர்ன்மென்ட் உத்தரவு).

நெ. 763.—சென்னபட்டணம் 1924-ம் ௵த்து 3-வது ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள 1911-ம் ௵த்திய சென்னபட்டணத்து

கொடைக்கூலி வண்டி ஆக்ட் 1-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (i) அடையாளமிட்ட பகுதியுடன் சேர்த்திருக்கும் விலக்கு நிபந்தனையின்படி, ஷை ஆக்டில் கண்ட நிபந்தனைகளை இராமனுதபுரம் ஜில்லாவிலுள்ள அடியிற்கண்ட விஸ்தீர்ணத்துக்கும் பாட்டைக்கும் 1931-ம்௵ எப்ரல்௴ 1௳யன்றைக்காவது அதற்குப் பிறகாவது வியாபிக்கும்படிச் செய்ய உத்தேசித்திருக்கிறதென்று இதனால் அறிக்கையிடப்படுகிறது. ஷை ஆக்டை மேலே உத்தேசித்திருக்கிறபடி வியாபிக்கச் செய்வதற்கு ஆட்சேபனையுள்ள நபர்கள் இந்த விளம்பரம் பிரசித்தம் செய்யப்பட்டதிலிருந்து இரண்டு மாதத்துக்குள்ளாக இராமனுதபுரம் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தங்களுடைய ஆட்சேபனைகளைத் தெரிவித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாகிறது :—

(1) ஸ்ரீவில்லிபுத்தூர் ரெயில்வே ஸ்டேஷன் விஸ்தீர்ணம்.

(2) ஸ்ரீவில்லிபுத்தூர் ரெயில்வே (Feeder) பீடர் ரோட் என்னும் பாட்டை (இதன் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றன).

எல்லைகள்.

கிழக்கில்.—புதிய ரெயில்வே பீடர் ரோட் என்னும் பாட்டை ; 28-ம் ந. அத்திக்குளம் செங்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஸர்வே 395, 402, 403, 404-ம் ந. புலங்களின் கிழக்கு எல்லை.

தெற்கில்.—இந்த எல்லை ரேகையானது—சித்தலம்புத்தூர் ஏரியின் சர்ப்பரா வாய்க்கால் நெடுக அத்திக்குளம் செங்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஸர்வே 406-ம் ந. புலத்தின் தென்கிழக்கு மூலைவரையில் சென்று, பிறகு 27-ம் ந. ஸ்ரீவில்லிபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஸர்வே 224, 223, 225-ம் ந. புலங்களின் கிழக்கு எல்லை நெடுக தெற்குத் திசையாகத் திரும்பி, பிறகு ஸர்வே 226, 227-ம் ந. புலங்களின் தெற்கு எல்லை நெடுக மேற்காகத் திரும்புகிறது ; பிறகு இந்த ரேகையானது—ஸர்வே 230, 232-ம் ந. புலங்களின் தெற்கு எல்லை நெடுக ஷை ஸ்ரீவில்லிபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஸர்வே 232-ம் ந. புலத்தின் தென்மேற்கு மூலைவரையில் போகிறது.

மேற்கில்.—இந்த எல்லை ரேகையானது—ஸர்வே 232-ம் ந. புலத்தின் தென்மேற்கு மூலையிலிருந்து ஆரம்பித்து, வடக்குத் திசையாக 2-ம் ந. நாச்சியார் கோவில் (1) கிராமத்தின் கிழக்கு எல்லை நெடுக ஸர்வே 217-ம் ந. புலத்தின் தென்மேற்கு மூலைவரையில் செல்லுகிறது ; பிறகு, ஷை ரேகையானது—ஸர்வே 217, 101-ம் ந. புலங்களின் மேற்கு எல்லை நெடுகப் போய், பிறகு கிருஷ்ணன் கோவில் மஜராவுக்குத தெற்கிலுள்ள மியுனிஸிபல் எல்லை நெடுக மேற்காகத் திரும்பி, பிறகு கிருஷ்ணன் கோவிலுக்கு மேற்கிலுள்ள மியுனிஸிபல் எல்லை நெடுக திருப்பல்லாடலின் தென்கிழக்கு மூலைவரையில் சென்று, பிறகு வடக்குத் திசையாக சோழன்குளம் சர்ப்பரா வாய்க்கால் நெடுக சாத்தூர் கிளைபாட்டையிலுள்ள பெரிய பாலம் வரையில் போகிறது.

வடக்கில்.—பிறகு இந்த எல்லை ரேகையானது—சாத்தூர் கிளைபாட்டை நெடுக கிழக்குத் திசையாகத் திரும்பி, பிறகு சாத்தூர் பாட்டை நெடுகப் போய் புதிய ரெயில்வே பீடர் பாட்டையைச் சந்திக்கிறது.

யூ. ராம ராவ்,
கவர்ன்மென்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம்௵
ஸெப்டெம்பர்௴ 26௳.

நெ. 799.—(1914-ம்௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம்௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - 1923-ம்௵ மார்ச்௴ 20௳யுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லா டிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம்௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக்குறித்த விதிகளில் செய்யும்படி அடியிற்கண்ட திருத்தங்களைக் களிகூர்ந்து வெளியிடுகிறார்கள் :—

திருத்தங்கள்.

I

ஷை விதிகளைச் சேர்ந்த இப்போதுள்ள 25-வது விதிக்குப் பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவும் :—

"25. சென்னை ராஜதானிப்பட்டணத்தில் பொலீஸ் கம்மிஷனரும் இதர இடங்களில் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டும் - யாதொரு பொதுவான இடம் அல்லது இடங்களின் எல்லைகளிலாவது அந்த எல்லைகளுக்குச் சமீபத்திலாவது ஏற்படுத்தப்பட்டிருக்கும் விளம்பரப் பலகைகளில் கண்டிருக்கக்கூடிய உச்ச வேகங்களுக்கு அதிகமாக மோடார் வண்டிகளை அந்தப் பொதுவான இடத்திலாவது இடங்களிலாவது ஓட்டக்கூடாதென்று நிர்ப்பந்தம் ஏற்படுத்தலாம் ; மேலும், எந்த நபரும் - ஷை பொதுவான இடத்திலாவது இடங்களிலாவது, அப்படிப்பட்ட விளம்பரப்பலகைகளில் கண்டிருக்கும் வேகத்துக்கு மேற்பட்ட வேகத்தில் யாதொரு மோடார் வண்டியை ஓட்டக்கூடாது."

II

இப்போதுள்ள 25-B விதிக்கு, அந்த விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதியென்று இலக்கமிட்டு, அடியிற்கண்டதை (2) குறிப்பிட்ட உபவிதியாக சேர்த்துக்கொள்ளவும் :—

"(2) (1) குறிப்பிட்ட உபவிதியின்படி பொலீஸ் கம்மிஷனரும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டும் செய்யும் சகல உத்தரவுகளையும், ஷை ரஸ்தா அல்லது தெரு அல்லது இதர பொதுவான இடத்தின் எல்லைகளிலாவது அந்த எல்லைகளுக்குச் சமீபத்திலாவது எல்லாருக்கும் தெரியும்படியாக நோடிஸ் ஒட்டிவைப்பதன் மூலமாய்ப் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்."

எ. எப். டபில்யு. டிக்ஸன்,
கவர்ன்மென்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.